# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 117/2017 | அரசு தரப்பு | அ.சா.1 |
| பெயர் | வேலுமணி | தாலூக்கா | |
| கணவர் பெயர் | | வயது | |
| கிராமம் | பொள்ளாச்சி. டி நல்லிக்கவுண்டன்பாளையம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 2nd day of September 2025.

( எதிரி அனூப் மேத்யூ ஜார்ஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் பொள்ளாச்சி டி நல்லிக்கவுண்டன்பாளையம், போயர் காலனி, வினாயகர் கோவில் வீதியில் கடந்த 27 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் சிட்டாள் வேலைக்கு சென்று வருகிறேன். எனது கணவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். எனக்கு விக்ரம், மற்றும் ஜனனி என்ற இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். நான் கிராம சக்தி என்ற மகளீர் சுய உதவி குழுவில் உறுப்பினராக இருந்தேன். அந்த குழுவில் உறுப்பினர் ஆவதற்கு எனது வாக்காளர் அடையாள அட்டையினை கொடுத்தேன். கடந்த 2016ல் கியூ பிரிவு போலீசார் என்னிடம் வந்து ஒரு சிம்கார்டு குறித்து விவரம் கேட்டனர். எந்த எண் சம்மந்தப்பட்ட சிம்கார்டு என்று எனக்கு தற்பொழுது எண் நினைவில்லை. போலீசாரிடம் நான் அந்த சிம்கார்டு நான் வாங்கவில்லை என்று கூறினேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் என்னுடையதுதான். அதில் என்னுடைய புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது. தற்பொழுது என்னிடம்

காண்பிக்கப்படும் படிவத்தில் ஒட்டப்பட்டிருக்கும் புகைப்படம் என்னுடையது. அந்த படிவத்தில் காணப்படுவது எனது கையொப்பம் அல்ல. நான் எப்பொழுதும் தமிழில்தான் கையொப்பம் செய்வோன். ஆனால் என்னிடம் காண்பிக்கப்படும் படிவத்தில் ஆங்கிலத்தில் கையொப்பம் போடப்பட்டுள்ளது. கடந்த 13-02-2016ல் அது குறித்து எழுத்துபூர்வமாக தாலூக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை நான்தான் எழுதினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் நான் தாக்கல் செய்ததாகும். அது அ.த.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது (ஒரு தாள், இரண்டு பக்கம்). எனது பெயரில் உள்ள சிம்கார்டை அனூப் மேத்யூ ஜார்ஜ் என்ற மாவோயிஸ்ட் பயன்படுத்தியதாக நான் தெரிந்து கொண்டேன். எனது புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. அதில் நகலைப் பெற்றுக் கொண்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். மேலே குறிப்பிட்ட சுயஉதவி குழுவின் சூப்பர்வைசராக இருந்த மாரிமுத்துவிடம் எனது வாக்காளர் அடையாள அட்டை, எனது குடும்ப அட்டை, ஆதார் கார்டு ஆகியவற்றை கொடுத்திருந்தேன்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் 2016ல் என்னிடம் படிவங்களை காண்பித்து விசாரித்தார்கள். படிவங்களையும் அப்பொழுதுதான் காண்பித்தார்கள். என்னை விசாரித்தது தாலூக்கா காவல் நிலைய போலீசார் ஆகும். அதற்கு முன்பு கியூ பிரான்ஞ் போலீசாரும் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். கையொப்பம் எதுவும் பெறவில்லை. எனது வாக்காளர் அடையாள அட்டையின் அசலை போலீசார் எடுத்துச் செல்லவில்லை. நான் 9வது வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மகளீர் சுய உதவி குழுவில் உறுப்பினராக இருந்தது சம்மந்தமான ஆவணங்களை

போலீசார் என்னிடமிருந்து வாங்கவில்லை. அனூப் மேத்யூ ஜார்ஜின் பெயரை போலீசார் சொல்லிக் கொடுத்தார்களா என்றால், நான் செய்திகள் மூலம் தெரிந்து கொண்டேன். நான் கூறிய நேரத்தில், கூறிய விதத்தில் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றும், எனது கையொப்பத்தை பெற்றுக் கொண்டு போலீசார் அவர்களாகவே புகாரை தயார் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது அடையாள அட்டைகளை வைத்து எந்தவித சிம்கார்டும் வாங்கப்படவில்லை என்றும், வாங்கப்பட்டதாகச் சொல்லப்படும் சிம்கார்டும் எவ்வித சட்டவிரோத செயல்களுக்கும் பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்பட்ட படிவங்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லிக் கொடுத்து அதற்கேற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாரிமுத்து என்பவரிடம் நான் எனது அடையாள அட்டைகள் எதையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் புகாரும், முதல் தகவல் அறிக்கையும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/வேலுமணி,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 117/2017 | அரசு தரப்பு | அ.சா.2 |
| பெயர் | கார்த்திக் | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | நடராஜ் | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 2nd day of September 2025.

( எதிரி அனூப் மேத்யூ ஜார்ஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் பொள்ளாச்சி டி நல்லிக்கவுண்டன்பாளையம், சரஸ்வதியம்மன் நகர், வினாயகர் கோவில் வீதியில் கடந்த 15 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 2016 ஆம் ஆண்டு தீபாவளி சமயம் நானும், எனது நண்பர் மகேஸ்வரனும் வடக்கிபாளையம் பஸ் ஸ்டேண்டில் நின்று கொண்டு எங்கள் வேலையைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது மலையாளம் கலந்த தமிழில் பேசிய ஒரு நபர் வந்து கொழுஞ்சாம்பாறைக்கு பஸ் உள்ளதா என்று கேட்டார். இங்கு அதிகமாக பஸ் வராது, நடுப்புணிக்குச் சென்றால் அங்கு நிறைய பேரூந்து வரும் என்று சொன்னேன். எங்கள் பக்கத்தில் மக்கள் கூட்டம் இருந்தது. அது என்னவென்று கேட்டார். அவ்வாறு இருப்பவர்கள் 100 நாள் வேலை செய்பவர்கள் என்று சொன்னேன். 100 நாள் கழித்து அவர்கள் என்ன செய்வார்கள் என்று என்னிடம் கேட்டார். 100 நாட்கள் முடித்து வேறு பணிக்கு செல்வார்கள் என்றும், மீண்டும் அவர்கள் 100 நாள் பணிக்கு வந்து விடுவார்கள் என்று சொன்னேன். என்னிடம்

பேசிய நபரின் பெயர் மேத்யூ என்று சொன்னார். சாட்சி மேத்யூ என்ற நபரை தனக்கு சரியாக ஞாபகமில்லை என்றும், அதனால் தன்னால் அடையாளம் காட்ட இயலவில்லை என்றும் கூறுகிறார். மேலும் மேற்படி மேத்யூ என்பவர் தன்னிடம் ஒரு இயக்கம் உள்ளது என்றும், அதில் எங்களை சேர்ந்து கொள்ளுமாறு கூறினார். அவ்வாறு சொன்ன இயக்கம் ஒரு மாவோயிஸ்ட் இயக்கம் என்று சொன்னார். அந்த இயக்கத்தில் சேர்ந்தால் நல்ல ஊதியம் கிடைக்கும் என்று சொன்னார். அரசாங்கம் சரியில்லாத காரணத்தினால் ஆயுதம் ஏந்தி போராடவேண்டும் என்று சொன்னார். அவ்வாறு சொன்னது எங்களுக்கு பிடிக்கவில்லை என்பதால் நாங்கள் வேலைக்குச் சென்று விட்டோம். என்னிடம் பேசிய நபரை ஒருமுறை நான் டி.வி -யில் பார்த்தேன். அதனால் அவரைபற்றி தாலூக்கா காவல் நிலையத்தில் நான் அவர் என்னிடம் பேசிய விவரத்தை கூறினேன். போலீசார் என்னை விசாரித்தபொழுது மேலே குறிப்பிட்ட விவரத்தை நான் கூறினேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் படிவத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆனால் அதை எதற்காக போட்டேன் என்று எனக்கு நினைவில்லை. நீண்ட நாட்கள் ஆனதால் எதற்காக போட்டேன் என்று தற்போது எனக்கு நினைவில்லை. இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையின்பொழுது 100 நாட்கள் வேலைக்குச் சென்றதாக நான் எதுவும் கூறவில்லை. 2016 தீபாவளி சமயத்தில் மேத்யூ என்ற நபர் எங்களிடம் பேசினார் என்று போலீசார் சொல்லிக் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மவோயிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்தால் அதிக ஊதியம் கிடைக்கும் ஆனால் ஆயுதம் ஏந்தி போராட எங்களுக்கு விருப்பம் இல்லை என்று போலீசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஓம்/கார்த்திக்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.